# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

**Tamil Study Centre - Mount Druitt**

*Mobile: 0449 892 066*

*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*

# ஆண்டு 5 – பேச்சுப் போட்டி 2019




அனைவருக்கும் எனது மாலை வணக்கம் !

நான் இப்பொழுது **“சிற்பக்கலை”** பற்றி உங்கள் முன் கூற வந்துள்ளேன்.

**சிற்பக்கலை** என்றால் என்ன?

ஒருவர் தன் கண்களால் கண்ட உருவங்கள் அல்லது கற்பனை உருவங்களை வடிவமைத்துச் செய்வது சிற்பக்கலை எனப்படும்.

மனிதன் படைத்த கலைகளுள் மிகச் சிறந்தது சிற்பக்கலை ஆகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இக்கலை வளர்ந்து வருகின்றது. இவை மனித நாகரீகத்தையும் அதன் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் சான்றுகளாகின்றன.

சிற்ப உருவங்களை மெழுகு, அரக்கு, சுதை, தந்தம், கல், பஞ்சலோகம் முதலியவகைகளினால் உருவாக்குகின்றார்கள். பெரும்பாலான சிற்ப ஓவியங்களை பார்க்கின்றபோது உயிரோட்டம் காணப்படுகின்றது. மனித வாழ்வின் தத்துவம் உணர்த்தப்படுகின்றன.

இக் கலை மூலம் எமக்கு பல பயன்கள் உள்ளன. எமது சிந்தனை உணர்வுகள் தூண்டப்படுகின்றன. அத்துடன் எதிர்காலத்தை நிர்ணயிக்கவும், வழிநடத்தவும், பாரம்பரியத்தை பேணிக்காக்கவும் எமக்கு உதவியாகவுள்ளன.

எனவே சிற்பக்கலை வருங்கால சந்ததியினரின் வழிகாட்டல் என்று கூறி அன்புடன் விடைபெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

பேச்சுப் போட்டி எதிர்வரும் **01.06.2019** அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.